அசல்

10.8.32. ஆ. ஆலாலசுந்தரம்.

அசல் – 1 நகல் – இல்லை

ஆ. ஆலாலசுந்தரம்
IV. தமிழ் ஆனர்ஸ் வகுப்பு
அண்ணாமலை யூனிவர்சிடி
அண்ணாமலை நகர்
10-8-32

அண்ணாமலைப் பல்கலைக் கழக தமிழ்ப் பேரவை

திருவாளர் மஹாமஹோபாத்தியாய Dr. உ.வே. சாமிநாத ஐயர் அவர்கட்கு. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை அமைச்சன் ஆ. ஆலாலசுந்தரம் ~~எழுதுவது~~ பணிவுடனும் அன்புடனும் எழுதுவது.

அன்புகெழுமிய ஐய,

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் பொதுக்கூட்டமானது 7-8-32 ஞாயிற்றுக்கிழமையன்று இரவு 7-30 மணிக்கு திரு. S. மஹாராஜன் IV. B.Sc அவர்கள் அவைத்தலைமையில் நடைபெற்றது. அதுபோழ்து இப்பேரவையின் அமைச்சர் ஆ. ஆலாலசுந்தரம் IV. Hons Tamil Literature) அவர்கள் ~~காரிய~~ இப்பேரவையின் காரிய நிர்வாக விஷயமாகக் கீழ்வரும் தீர்மானத்தைக் கொண்டுவர ~~அதை~~ தலைவர் ஆமோதிக்க அதை இப்பேரவை அங்கத்தினர் அனைவரும் ஒருமனதுடன் ஏற்றுக் கொண்டனர்.

தீர்மானம்

"அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் அங்கத்தினராகிய நாங்கள், உயர்திரு, மஹாமஹோபாத்தியாய உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் (Doctor of Literature) ~~[illegible]~~ "கலைநூல் முதுப்புலவர்" என்ற பட்டம் பெற்றதற்கு அன்னார்க்கு எங்கள் மகிழ்ச்சியினைத் தெரிவித்து அப்பட்டத்தினை அவர்களுக்கு அளித்த சென்னைப் பல்கலைக் கழக அதிகாரிகளுக்கு எங்கள் நன்றியைச் செலுத்துகின்றோம்."

~~இப்பேரவை~~ இத்தீர்மானத்தைக் கொண்டுவந்த இப்பேரவையின் அமைச்சர் ஆ. ஆலாலசுந்தரம் IV. Hons (Tamil) ஆற்றியதின் சாரம் :—

"தலைவர் அவர்களே! நண்பர்களே! உயர்திரு. மஹாமஹோபாத்தியாய ~~மஹா~~ உ.வே. சாமிநாத ஐயர் அவர்களைத் தெரியாத இத்தென்னிந்தியாவில் தமிழ்ப் பண்டிதரும், மாணவரும் ஒருவருமில்லை என்பேனாகில் அது மிகையாகாது. தமிழ் நாட்டில், ஐயர் என்றால் திருவாளர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களையும் பிள்ளை என்றால் மஹாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களையும் நாவலர் என்றால் ஆறுமுக நாவலரையும் குறிக்கும். இதனாலேயே நமது ஐயர் அவர்களின் புகழினை நாம் அறியலாம். பெரியோர்களே! யான் திரு ஐயர் அவர்களை சுமார் ~~ஆறு~~ ஐந்து வருஷங்களாக அறிவேன். 1927 வருஷம் யான் சென்னைப் பச்சையப்பன் கல்லூரி தமிழ்ச் சங்கத்தின் அமைச்சனாக இருந்த போழ்து நமது ஐயர் அவர்களை ~~[illegible]~~ எங்கள் கல்லூரிக்கு வரவழைக்கச் சென்றேன். அதுபோழ்து அன்னார் அவைத்தலைமை [illegible] அவர்கள்

பதில்

10.8.32. ஆ. ஆலாலசுந்தரம்

அசல் – 1 நகல் – இல்லை

... புறநானூற்றைப்பற்றி
கூறிய முடிவுரையானது பல்லோர் ஐயத்தையும் கொள்ளை
கொண்டது. திரு. ஐயர் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தின்
சாலியில் செய்த சொற்பொழிவுகளையெல்லாம் யான் கேட்டுக்
களிப்பேர் உவகை கொண்டேன். இவர்கள், அம்பலவாண தேசிகர்,
சாமிநாத தேசிகர் ஆசிரியர் சிவஞான சுவாமிகள் முதலிய
இன்னும் ஏனைய பெரியார்கள் படித்துப் போற்றத் திருவாவடு
துறை ஆதீனத்து மஹாவித்வான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை
அவர்களின் மாணவருள் ஒருவர். தமிழ்நாடு திருவாவடுதுறை
ஆதீனத்தை மறந்தது என்றால் அது மிகையாகாது.
திரு. ஐயர் அவர்கள் சங்கநூல்களையும் மற்றநூல்களையும்
வெளியிடுதற்குப் பட்ட கஷ்டங்கள் பல. இவர்கள் இச்
சங்கநூல்களை வெளியிடாவிட்டால் நாம் சிந்தாமணியின்
சிறப்பை எவ்வாறு உணர்வது? மணிமேகலையின் மாட்சியை
அறிவதெப்படி? சிலப்பதிகாரத்தின் சீர்மையினையும்
மேன்மையினையும் உணர்வதெங்ஙனம்? புறநானூற்றில்
கூறியுள்ள புலவர்களின் புகழ்ச்சியை எவ்வாறு புகழ்வது?
வெண்பாமாலையில் கூறியுள்ள புறப்பொருளை யாங்ஙனம்
அறிவது? திரு. ஐயர் அவர்கள் இத் தென் இந்தியாவில்
பிறந்தது தமிழர் செய்த தவமோ தமிழ் ஆசிரியர்கள்
செய்த தவமோ தமிழ் மாணவர்கள் செய்த தவமோ
அல்லது தமிழ்த்தாய் செய்த தவமோ யான் அறியேன்!
அறியேன்! திரு. ஐயர் அவர்களுக்கு சைவத்தின்
பற்று உண்டு என்பது அன்னார் இயற்றிய நூல்களின்
முகவுரையில் தேவார திருவாசகங்களின் வழிபடு கடவுள்
வணக்கமாக வைத்துள்ளதே சான்றாகும். Doctor of
Literature கலைநூல் தீட்டுப்புலவர் என்ற ஒரு பட்டம் மற்றும்
இவர்க்குப் போதாது, உலகத்திலுள்ள பட்டங்களையெல்லாம்
இவர்க்கு அளிக்கினும் இவர் செய்த தமிழ்த் தொண்டுக்கு
சமமாகாது. இவர் ~~தமிழ்~~ தமிழ்த்தாய்க்கு பெருமரும்பணி புரிந்து
பொற்புடை நாற்கவிப் புதுப்பணி யாற்றியுள்ளார்கள்.
ஆகவே இப்பெரியார் ~~[illegible]~~ நீடூழி வாழ்ந்து இன்னும்
தமிழ்த்தாய்க்கு தொண்டுகள் பல ஆற்றும்படி யான்
எல்லாம் வல்ல ஸ்ரீ நடராஜப் பெருமானை வாழ்த்துகின்றேன்.
திருவாளர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் நீடூழி வாழ்க!
வாழ்க!! வாழ்க!!!

இங்ஙனம்,

ஆ. ஆலாலசுந்தரம். IV. Hons. (Tamil Literature)
அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேரவை